1982 மார்ச் 8]

ஏராளமாக இருக்கின்றன ; எங்களுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இப்பொழுது ஒரு பிரச்னை சொல்லப்படுகிற காரணத்தால், அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்குக் காங்கிரஸ் கட்சி காலத்திலே கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் இடிந்து விட்டன . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழைய காலத்திற்குப் போனால், வீண் பிரச்சினை எழும். இப்போது கட்டப்படுவதைப் பற்றிக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : உண்மையை சொல்லக் கூடாதா ? அரிசன மக்களுக்கு இதுவரை கட்டிக்கொடுக்கப்பட்ட எந்த வீடுகளுமே உத்தரவாதமாக இல்லை. இப்பொழுது இவர்கள் கொடுக்கிற ரூ. 4,000-லே, ரூ. 700-க்கு மேல் உழைப்பின் மூலம் என்று வைத்திருப்பதால் பல வீடுகள் பேஸ்மென்ட் நிலையோடு நிற்கின்றன ; அவை நிலையாக நிற்பதற்கு, விரைவாகச் செயல்படுத்த அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு திரு. அம்பிகாபதி மிகப் பிரபலமானவர். அவருக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கும். இந்த வீட்டை அரசு கட்டுவதில்லை. பெனிபிஷியரீஸ், அவர்களே கட்டுவது. எனவே, அவர் சொல்லும் பிரச்னை அதில் எழவில்லை.

திருச்சி நகர குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்

*வினா எண் 413—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் குடிசைப்பகுதி மேம்பாட்டுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ)—

(1) திருச்சிராப்பள்ளி நகராட்சிக்கு 1981-82 ஆம் ஆண்டில் "குடிசைப் பகுதி துரித மேம்பாட்டுத் திட்டங்களை" accelerated slum Improvement செய்து முடிப்பதற்கு ரூ. 15.00 இலட்சம் மான்யமாக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

(2) திருச்சி நகரில் "கல்மண்டை" என்ற இடத்தில் 64 குடியிருப்புகளும், "பிச்சான்குளம்" என்ற இடத்தில் 391 குடியிருப்புகளும் ஏற்கனவே குடிசை மாற்று அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மொத்தம் 455 குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

(3) தற்போது, குடிசைப்பகுதி மாற்று அபிவிருத்தி திட்டத்தின்கீழ் திருச்சி நகரில் எந்தப் புதிய திட்டமும் இல்லை.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த காலத்திலே நடந்து முடிந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், இன்றையதினம் அங்கேயிருக்கிற பிரச்சினைகள், குடிசைப் பகுதிகள் ஏறக்குறைய 54 இருக்கின்றன. அங்கே எந்தவிதமான வசதிகளும் இல்லாத சூழ்நிலையில், அங்கேயிருக்கிற மக்கள் கழிவுநீரை அகற்றுவதற்கோ, அல்லது குடிநீர் பெறுவதற்கோ வாய்ப்பு வசதியில்லாமல், இன்றையதினம் மிகப்பெரிய அளவிற்கு வியாதிகள் வருகின்ற அளவிற்கு சூழ்நிலைகள் இருக்கின்றன என்று கூட பத்திரிகைகள் எல்லாம் பலமாகச் சொன்ன பின்னாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது திட்டம் இல்லையென்று சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காக உடனடியாகத் திட்டங்களைத் தீட்டுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்சிலரேடட் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் என்ற வகையில் 1977-78 ஆம் ஆண்டிலே 30 லட்சமும், 1978-79-லே 15 லட்சமும், 1979-80-லே 15 லட்சமும் ஆக 60 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது. 1980-81-ல் ஒதுக்கப்படவில்லை. எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததை மனதிலே கொண்டு நடப்பு நிதி ஆண்டில் 1981-82-லே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூபாய் 15 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது

1982 மார்ச் 8]

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அங்கே பல்வேறு பகுதிகளில் இன்று வரையிலும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த 15 லட்சம் ரூபாய் என்பது யானைப்பசிக்குச் சோளப்பொறி போடுவது போன்றதாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். குத்பாநகர் குத்பா பள்ளம், வடலூர், பீமநகர், உறையூர், சோழராஜபுரம் மேல்சிந்தாமணி, கல்லுக்குழி, மல்லிகைபுரம், அண்டகொண்டார், ஆழ்வார்தோப்பு, வண்ணாரப்பேட்டை, எம்.ஜி.ஆர். நகர், காந்தி நகர் போன்ற பகுதிகள் அத்தனையும் சகதியிலே மிதந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கேயுள்ள சிறந்த திறமையைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலே அவர் ஏற்கனவே இருந்தவர் என்பதையும் நினைவில் கொண்டு, அதை மாற்றி அமைக்க முயற்சி எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் நானும் சேர்ந்து எல்லா இடங்களையும் பார்த்திருக்கிறோம். அந்த அண்டகொண்டார் என்ற இடம் முன்பெல்லாம் மனிதர்கள் வசிப்பதற்கு ஏதுவில்லாமல் சுத்தமாக இருக்காது. ஆனால் இப்போது அதைப் பார்த்தால் மிக சிறப்பான இடமாக மாறி இருக்கின்றது. அதைப்போலவே மற்றப் பகுதிகளையும் மாற்றி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிக்கும் பணி

*** வினா எண் 414—திரு. எஸ். ஆண்டித்தேவர்** : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பராமரிப்பதற்கு அரசு செலவில் பராமரிப்பாளர்கள் போடப்பட்டுள்ளனரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிப்பதற்காக ஊராட்சி மன்றங்களும் பேரூராட்சி மன்றங்களும், தற்காலிகமாக ஆட்களை நியமித்துப் பராமரித்து வருகின்றன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பல இடங்களில் உள்ள இந்த நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதன் காரணமாக எங்கு பார்த்தாலும் ஒழுகிக் கொண்டு இருக்கின்றன. பல வருடங்களாக ஒழுகிக் கொண்டு இருக்கின்றன. அவைகளை